**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். CC. 142 /2014**

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2ம் தேதி வெள்ளி கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 13**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஏழுமலை | தொழில் | : வழக்கறிஞர் |
| தந்தை பெயர் | : சிங்காரம் | சமயம் | : |
| கிராமம் | : கடலி | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : |

**(1,2 எதிரிகள் ஆஜர் )**

சாட்சியையும் எதிரியும் DCB காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி. கீதா W.Gr.12015 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**முதல் விசாரணை**

**1.** நான் கடலி கிராமத்தில் வசித்து வருகிறேன். வழக்கறிஞராக உள்ளேன். அ.சா.1 ஏழுமலை என்பவரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள். 2011 முதல் 2016 வரையில் கடலி கிராமத்தில் பஞ்சாயத்து தலைவராக இருந்தேன். ஆஜர் எதிரிகள் யாரிடமிருந்து பணம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியவில்லை. ஆஜர் எதிரிகள் என் கட்சியை சார்ந்தவர் என்பதனால் அது சம்மந்தமாக கேட்டதற்கு எதுவும் சொல்லவில்லை. வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. போலிசார் விசாரணையில் ஆஜர் எதிரிகள் இருவரும் அண்ணாமலை பல்கலைகழகத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு, பட்டம் வாங்கி தரும் ஏஜென்ட்டாக சம்பளத்திற்கு வேலை செய்ய என்னிடம் இருந்து ரூ.5000/- பெற்றதகாவும், பின்னர் வேலை வாங்கி தரவில்லை என்றும் போலிசார் விசாரரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை:**

**4.** நான் ரூ.5000/- ஐ எதிரியிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான பிரச்சனை நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் புகார் கொடுத்தவர் யார் என்றால் தெரியவில்லை. எது சம்மந்தமாக இந்த வழக்கில் புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் எனது கட்சியுடன் சேர்ந்தவர்கள் என்பதால் தெரியும் என்றால் சரிதான். பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக போலிசார் சொன்னதின் பேரில் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.